<u>**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**</u>

**O.S. No. 221/2015**

Deposition of **<u>D.W.-1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 16.11.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : ராஜேந்திரன் Father's Name : சுப்பராயன்

துவக்க நேரம் : 12.41 P.M

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:

1. என் வீட்டினுடைய சர்வே எண் என்னவென்றால் சர்வே எண்.636. மேற்படி சர்வே எண்ணில் உட்பிரிவு என்னவென்றால் 636/B1 ஆகும். இவ்வழக்கில் வாதியினுடைய வீட்டின் சர்வே எண் என்னவென்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் எனக்கு தெரியாது.

2. இவ்வழக்கில் நான் முதல் பிரதிவாதி என்றால் சரிதான். இவ்வழக்கில் பதிலுரை தாக்கல் செய்வதற்கான சங்கதிகளை யார் வழக்கறிஞரிடம் சொன்னார் என்றால் நானும், பாலு என்பவரும் சொன்னோம். மேற்படி பாலு என்பவர் இவ்வழக்கில் தரப்பினரா என்றால் இல்லை, 3-ஆம் பிரதிவாதியின் மகன் ஆவார்.

3. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பதிலுரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் எனது சொத்திற்கான ஆவணத்தை நான் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால்

ஒப்படைத்துள்ளேன். பூர்விகம் என்பதற்கு என்ன ஆவணம் ஒப்படைத்துள்ளேன் என்றால் அதற்குண்டான UDR பட்டா ஒப்படைத்துள்ளேன். தாவா சொத்து அமைந்துள்ள இடம் கிராம நத்தம் என்றால் சரிதான்.

4. எனது வீட்டின் சர்வே எண் 636/17 என்றால் சரிதான். எனது வீட்டின் மேற்குபுறத்தில் சர்வே எண். 636/16 சந்தாக உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண். 636/18 என்றால் சரிதான். தாவா சொத்தான சர்வே எண். 636/18-ன் வடபுறத்தில் தான் வாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான்.

5. என்னுடைய வீடு தம்மம்பட்டி டு கெங்கவல்லி செல்லும் தார்சாலையில், தார்சாலையை ஒட்டி வடபுறத்தில் உள்ளது என்றால் தார்சாலையை ஒட்டி கடை உள்ளது, கடைக்கு அடுத்து வடபுறம் எனக்கு வீடு உள்ளது. அதற்கும் வடக்கு வீடு கட்டுவதற்கு காலி இடம் உள்ளது.

6. காலி இடம், கடைக்கு மேற்கில் சர்வே எண் 636/16-ல் ஒரு சந்து உள்ளது என்றால் சரிதான், 1-1/2 அடி உள்ளது. வா.சா.ஆ.3 வரைபடத்தின்படி சர்வே எண். 636/16-ல் உள்ள சந்து 1 மீ என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் அப்படித்தான் உள்ளது. ஆனால் இடம் 1-1/2 அடி தான் அங்கு உள்ளது. எனக்கு 1-1/2 அடி, மேற்கால் உள்ள நபருக்கு 1-1/2 அடி உள்ளது.

7. சர்வே எண். 636/16 என்பது சந்து என்றுதான் கிராம கணக்கில் உள்ளது என்றால் சரிதான். கிராம கணக்கில் சந்து என்று உள்றள நிலையில் நானும், எதிர்வீட்டுக்காரரும் தலா 1-1/2 அடி என்று பிரித்துக்கொள்ள எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. சந்து என்று கிராம கணக்கில் வந்துவிட்டால் அதை சந்தாகத்தான் பயன்படுத்த வேண்டுமே தவிர

கூரைத்தண்ணீர் செல்வதற்கு மட்டும் பயன்படுத்த முடியாது என்றால் சரியல்ல, மழை நிர் வெளியேறுவதற்காக பூமிக்கடியில் நான் பைப் போட்டுள்ளேன்.

8. மேற்படி சந்தை கூரைவாரி தண்ணீர் வெளியேற்றுவதற்காக பயன்படுத்த முடியாது என்றும் பொதுமக்கள் பயன்படுத்துவதற்காக போடப்பட்ட சந்து என்றாலும் அதனால்தான் அந்த சந்து தனியாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வாதியின் வீட்டிற்கு ராஜவீதியிலிருந்து கிழக்கிலிருந்து மேற்காக ஒரு சந்து செல்கிறது என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதுவும் சந்துதானா என்றால் ஆமாம், அது 6 அடி அகலமுள்ள சந்து ஆகும்.

9. கிழமேலாக வாதி வீட்டிற்கு செல்வதாக சொல்லும் சந்தின் சர்வே எண் என்னவென்றால் ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் வரைபடம் (வா.சா.ஆ.3) எனது வீட்டிற்கான வரைபடம் என்றால் சரிதான். வாதியின் வீட்டின் சர்வே எண். 636/19 என்றால் சரிதான். வாதியின் வீட்டின் கிழபுறமுள்ள வீட்டின் சர்வே எண் 636/23 என்று இந்த வரைபடத்தில் உள்ளது என்றால் சரிதான்.

10. சர்வே எண்.636/23 க்கும் தென்புறத்தில் சர்வே எண். 636/24 உள்ளதா என்றால் சர்வே எண், 636/23 க்கு தென்புறம் 6 அடி சந்து உள்ளது. அதன் சர்வே எண். 636/22 ஆகுடம். நான் சொல்வது தவறு என்றாலும், சர்வே எண்.636/22 என்பது சர்வே எண். 636/23 க்கு வடபுறத்தில் உள்ளது என்றாலும் தென்புறத்தில் இல்லை என்றாலும் சரியல்ல.

11. எனது வீட்டின் கட்டிய பகுதி மற்றும் காலி இடம் அனைத்தும் சேர்ந்துதான் சர்வே எண்.636/17 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, கட்டிய பகுதிக்குதான் சர்வே எண்.

636/17, கட்டாத பகுதிக்கு சர்வே எண் தெரியவில்லை. இந்த வரைபடத்தின்படி வீடு கட்டாத பகுதிதான் 636/17 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், காலி இடத்திற்கு சர்வே எண் எனக்கு தெரியாது என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல, எனக்கு 1 என்பது போல் தெரிகிறது. அந்த காலி இடமும், வீடும் எனக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் ஆமாம்.

12. சர்வே எண் 636/23-க்கு தென்புறத்தில் சர்வே எண். 636/24 உள்ளது என்றால் ஆமாம். சர்வே எண் 636/23 க்கும் சர்வே எண். 636/24-க்கும் இடையில் உள்ள சந்திற்கு தனி சர்வே எண் ஒதுக்கப்பட்டுள்ளதா என்றால் ஆரம்பத்தில் இருந்தது தற்பொழுது எனக்கு ஞாபகமில்லை. நான் சொல்வதுபோல் அங்கு சந்து இல்லை என்றாலும், அது ஒரு குப்புசாமி ரெட்டியாருக்கு பாத்தியப்பட்டு அவர் இந்த சர்வே எண்ணில் வீடு கட்டியது போக வடபுறத்தில் காலி இடத்தை விட்டு வைத்துள்ளார் என்றாலும் அதைதான் நான் சந்து என்று சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்லும் அந்த இடம் சந்தாக இருந்திருந்தால் உட்பிரிவு செய்யப்பட்டிருக்கும் என்றாலும் சர்வே எண் 636/16-ல் 3-1/4 அடிக்கே தனி உட்பிரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் சர்வே எண். 636/24-ல் 6 அடி சந்து இருக்குமானால் அதற்கு தனி உட்பிரிவு செய்திருப்பார்கள் என்றாலும் வழக்கிற்காக அந்த இடத்தை சந்து என்று சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

13. சர்வே எண். 636/18, தெரு சந்து என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, ஏறகனவே சந்தாக இருந்தது. வாதி, கிராம நிர்வாக அலுவலர், அவரது உதவியாளர்களை வைத்து UDR-ல் பட்டா மாற்றிக் கொண்டார். சர்வே எண். 636/18 சந்து என்று சொல்லி வாதி

அவரது வீட்டிற்கு சென்று வரும் வசதியை நான் அந்த இடத்தில் வாகனங்களை நிறுத்தி தடை செய்து வந்ததால்தான் வாதி இந்த வழக்கிற்காக நீதிமன்றத்தை நாடி வந்தார் என்றால் சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 01.36 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/- S.Munusamy
Principal Distrit Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.221/2015 , Dt.16.11.2024.